Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 288

வியாழக்கிழமை
11 செப்ரெம்பர் 2025

ஆவணி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நீதிபதிகள் பலருக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 11
நீதிபதிகள் பலருக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவால் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, மல்லாகம் மாவட்ட நீதிபதியாகப் பணியாற் 11

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## மிரட்டுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, செப்ரெம்பர் 11
சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார எச்சரித்துள்ளார். 11

## முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இரத்து!

### நிறைவேறியது தீர்மானம்

கொழும்பு, செப். 11
முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை இரத்துச்செய்யும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நேற்று 150 மேலதிக வாக்குகளால் நிறை 10

## அரசமாளிகையில் இருந்து வெளியேறுகிறார் மஹிந்த



கொழும்பு, செப்ரெம்பர் 11
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள அரசமாளிகையில் இருந்து இன்று வெளியேறவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. 11

### சபுகஸ்கந்த

## எண்ணெய் நிலையத்தில் மிகப்பெரும் தீ விபத்து!

கொழும்பு, செப். 11
சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் நேற்று மிகப்பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு வந்தனர். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பழுதுபார்த்தல் பணிகளின் போதே 11

## மக்களின் வரிப்பணத்தை சுரண்டியே வாழ்கின்றனர்

### முன்னாள் ஜனாதிபதிகள் மீது நீதியமைச்சர் கடும் காட்டம்



கொழும்பு, செப். 11
முன்னாள் ஜனாதிபதிகள் மக்களின் வரிப்பணத்தை சுரண்டியே வாழ்கின்றனர். இவ்வாறான பிற்போக்குத்தனத்தை தொடர்ச்சியாக அனுமதிக்கமுடியாது - என்று நீதி மற்றும் தேசிய 11



## சர்வதேசப் பொறிமுறைதான் ஈழத்தமிழர்களுக்கு ஒரேவழி

### தமிழரசுக்கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 11
ஆயுதப்போராட்டம் முடிவடைந்து பதினாறு ஆண்டுகள் ஆனபோதும் எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறைகளும் உருவாக்கப்படவில்லை. ஆதலால், பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேசப் பொறிமுறையை நாடுவதைத் தவிர வேறுவழியில்லை -இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சி 11

### முச்சந்தி முரளி

**'ஆடிய ஆட்டமென்ன? பேசிய வார்த்தை என்ன? இப்ப ஓடுற ஓட்டமென்ன?'**

## குளவிகொட்டி மூதாட்டி பலி

யாழ்ப்பாணம், செப். 11
யாழ்ப்பாணம் - தெல்லிப்பழைப் பகுதியில், குளவிக் கொட்டுக்கு இலக்காகி மூதாட்டியொருவர் உயிரிழந்துள்ளார்.
செல்வநாயகம் பாலசரஸ்வதி (வயது-82) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந் 11

### சுவிட்ஸர்லாந்தில்

## மாடியிலிருந்து வீழ்ந்த யாழ். இளைஞர் பலி!



சூரிச், செப். 11
யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இளைஞர் ஒருவர், சுவிட்ஸர்லாந்தில் தனது நண்பரின் வீட்டு மூன்றாம் மாடியில் இருந்து 11




மக்கள் மனச் சாட்சியாய் தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4190
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 24 34 46 69
விசேட எழுத்து G

**ஹந்தஹனை ராசி சுப பலன்**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1257
வெற்றி இலக்கினம் [illegible]
வெற்றி இலக்கங்கள் 20 34 47 55

**NLB ஜய**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0216
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 1 4 0 3

**மெகா பவர்**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2296
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 02 04 43 74

**மஹஜன சம்பத**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5948
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 3 1 5 9 9 0

**தன நிதானய**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1978
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 01 07 10 27
விசேட எழுத்து U

**அத சம்பத**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0523
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 5 9 9 0

**சுப தவசக்**
திகதி 10.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0064
வெற்றி இலக்கினம் மகரம்
வெற்றி இலக்கங்கள் 13 27 36 46

# சர்வதேசப் பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறல் உறுதிப்படும்!

## பேர்ள் அமைப்பு ஜெனிவாவில் வலியுறுத்து

**கொழும்பு, செப்.11**

**சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறை ஊடாக மட்டுமே, இலங்கையில் நீண்ட காலமாகத் தொடரும் தண்டனைகளில் இருந்து விடுபடும்போக்கை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்று இலங்கையில் சமத்துவம் மற்றும் விடுதலைக்கான மக்கள் (பேர்ள்) அமைப்பு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. ஆரம்பநாள் அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கால் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, அந்த அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. அந்த விவாத்திலேயே பேர்ள் அமைப்பின் பிரதிநிதி மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையில் போர் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் கடந்த பின்னரும் நாட்டில் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் இன்னமும் நீதியோ, பொறுப்புக்கூறலோ உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை செம்மணி மனிதப் புதைகுழி நினைவூட்டுகிறது" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 796க்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியவில்லை, அவர்கள் மரணித்திருக்கக்கூடும் என நம்பப்படுகின்றது என்று குறிப்பிட்ட அவர், சர்வதேசப் பொறுப்புக்கூறல் பொறிமுறையின் ஊடாக மாத்திரமே இலங்கையில் நீண்டகாலமாகத் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக்கொண்டு வரமுடியும் என வலியுறுத்தினார். (எ-இ)

# ஒதுக்கீட்டுச் சட்டவரைவு தயாரிப்பதற்கு அனுமதி

கொழும்பு, செப்.11

2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டவரைவைத் தயாரிப்பதற்காக கடந்த ஜூலை மாதம் முதலாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள 2026 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவுக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளது.

அந்தச் சட்டவரைவை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

# அருண ஜயசேகர மீதான பிரேரணையை ஏற்கோம்

## சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,செப்.11



பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்றுக்கொள்ளமுடியாது என சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் விதிகளுக்கு அமைய அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பொருத்தமற்றது. இருப்பினும், இந்தப் பிரேரணையை வேறு வழியில் கொண்டு வரமுடியும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# இலங்கையில் சர்வதேசத் தலையீடு நல்லிணக்க முயற்சியைப் பாதிக்கும்

## ஐ.நா. பேரவையில் சீனா தெரிவிப்பு

கொழும்பு,செப்.11

இலங்கை விவகாரங்களில் வெளிநாடுகள் அரசியல் அழுத்தம் கொடுப்பது மற்றும் தலையிடுவதை நாம் எதிர்க்கின்றோம். இது பிரிவினையை உருவாக்கும். இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் சீனப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மக்கள் தேர்ந்தெடுத்த மனித உரிமைகள் மேம்பாட்டுப் பாதையை மதிக்கவேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதையும், அரசியல் அழுத்தங்களையும் கைவிட்டு, பேச்சு மற்றும் ஒத்துழைப்புக்கான சரியான பாதைக்குத் திரும்பவேண்டும். ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள், 'தூய இலங்கைத்திட்டம்', சுதந்திரமான அரச சட்டவாளர் அலுவலகம் நிறுவுதல் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் போன்ற முக்கியமான வழக்கு விசாரணைகளில் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் இலங்கையின் முயற்சிகளைப் பாராட்டுகின்றோம்.

அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும், பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும், நிலையான முன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கும் இலங்கை எடுக்கும் முயற்சிகளுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கின்றோம். இந்த முயற்சிகள் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0656
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கம் 4 5 2 5 3 7

**Super Ball**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2922
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கம் 09 35 45 59

**சனிதா**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கம் 11 14 22 42
வெற்றி வாரம் 5083

**லக்ன ராசி**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
கன்னி
வெற்றி இலக்கம் 14 26 27 28
சீட்டிழுப்பு வாரம் 4634

**KAPRUKA**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து W
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கம் 16 37 70 71
வெற்றி வாரம் 2098

**அத கோடிபதி**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கம் 40 50 53 71
வெற்றி வாரம் 2748

**JAYODA**
திகதி 10.09.2025 | தினம் புதன்கிழமை
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 27 58 59 68
வெற்றி வாரம் 2160

# கொழும்பு பஸ் நிலையம் 10 மாதங்களுக்குப் பூட்டு

கொழும்பு,செப்.11

புனரமைப்புப் பணிகளுக்காக, கொழும்பு மத்திய பேருந்து நிலையம் இன்று முதல் 10 மாதங்களுக்கு மூடப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

புனரமைப்பு முன்னெடுக்கப்படும் காலத்தில், புறக்கோட்டை, போதிராஜ மாவத்தை, குணசிங்கபுர மற்றும் பெஸ்டியன் மாவத்தை ஆகிய இடங்களில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் இயக்கப்படும்.

ஒருங்கிணைந்த கால அட்டவணையின்கீழ் உள்ளவை உட்பட நீண்ட தூரப் பேருந்துகள் பெஸ்டியன் மாவத்தையிலிருந்தும், குறுகிய தூரப் பேருந்துகள் போதிராஜ மாவத்தையிலிருந்தும் இயக்கப்படும்.

புனரமைப்புப்பணிகள் இலங்கை விமானப்படையால் மேற்கொள்ளப்படும். ஒரு வருடத்துக்குள் பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காகக் கிட்டத்தட்ட 540 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்புத் திட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் தலைமையில் அதிகாரபூர்வமாகத் தொடங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமப்புற வாழ்வாதாரத்துக்கு 100 மில்லியன் டொலர் நிதி!

## உலக வங்கியுடன் ஒப்பந்தம்


**கொழும்பு,செப்.11**

**விவசாய உணவுத் துறையில் கிராமப்புற வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், காலநிலை பாதிப்புகளுக்கு ஏற்ப தாங்கும் திறனை மேம்படுத்தவும், புதிய 100 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான கூட்டாண்மை ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும், உலக வங்கி குழுமமும் இணைந்து ஈடுபட்டுள்ளன.**

அதன்படி ஒருங்கிணைந்த 'கிராமப்புற மற்றும் நகர்ப்புற மேம்பாடு மற்றும் காலநிலை தாங்குதிறன் திட்டம்' மூலம் இலங்கையில் 3 இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமானமக்கள்பயனடைவார்கள். இந்தத் திட்டம், 8,000 விவசாய உணவு உற்பத்தியாளர்களுக்கு நேரடியாக ஆதரவு அளிப்பதுடன், 71 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நீர்ப்பாசனம்மற்றும்வடிகால்சேவைகளை மேம்படுத்த உதவும்.

இது கிராமப்புறங்களில், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. இலங்கையின் 80% உணவை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகள், இந்தத் திட்டத்தின் மையப் புள்ளியாக உள்ளனர். விவசாயிகள் உலகளாவிய சந்தைகளில் போட்டியிடவும், ஏற்றுமதி வாய்ப்புகளைத் திறக்கவும், விவசாயத் தரவு அமைப்புகளை மேம்படுத்துவதுடன், உணவுப் பாதுகாப்புத்தரங்களைமேம்படுத்தவும் இந்தத் திட்டம் வழிவகுக்கும் என்றும் உலக வங்கி குழுமம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# சத்துருக்கொண்டான் படுகொலை நினைவு



மட்டக்களப்பு,செப்.11

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் இனப்படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல், சத்துருக்கொண்டான் நாற்சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத்தூபியில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. 4 கிராமங்களைச் சேர்ந்த 4 பேர் ஒன்றிணைந்து பொதுச்சுடர் ஏற்றினர். தொடர்ந்து மலர்தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். நிகழ்வில் மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர், முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் பங்கேற்றனர்.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி, சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி போன்ற பிரதேசங்கள், இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன. இதன்போது குழந்தைகள், பெண்கள் உட்பட 186 பேர் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# உச்சம் தொடும் தங்கம் விலை

கொழும்பு,செப்.11

தங்கத்தின் விலையில் நேற்று இரு தடவைகள் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தங்க வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுத் தங்கம் விலை 7 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து, தற்பொழுது 3 இலட்சம் ரூபாவாக விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 24 கரட் தங்கபவுண் ஒன்று 300,000 ரூபாவாகவும் 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 2 இலட்சத்து 77 ஆயிரத்து 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. (ச-இ)



# ரூ.600 மில்லியன் மானியம் இந்தியாவுடன் ஒப்பந்தம்!

மன்னார்,செப்.11

மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் 600 மில்லியன் ரூபாய் மானியப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க ஆகியோர் கொழும்பில் வைத்துக் கையெழுத்திட்டுள்ளனர். இந்தத் திட்டம், இலங்கையின் சுகாதாரத்துறையில் இந்தியாவின் ஒத்துழைப்புப் பட்டியலை நீடித்துள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# நேபாளத்துக்கான விமானசேவை துண்டிப்பு

கொழும்பு, செப்.11

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கும் நேபாளத்தின் கத்மண்டுவுக்கும் இடையிலான விமான பயணங்களை நேற்றுப் புதன்கிழமை காலை முதல் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவன தகவல் தொடர்புத் தலைவர் தீபால் பெரேரா தெரிவித்தார். அதன்படி நேற்றுப் புறப்படவிருந்த ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. நேபாளத்தில் நிலவும் அமைதியின்மை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)




# இனியும் நம்பிறியளோ?

என்னதான் மாற்றம், மண்ணாங்கட்டி எண்டு படம் காட்டினாலும், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்கள் எண்டுறது எப்பவுமே மாறாது எண்டதை நிரூபிக்கிற மாதிரி ஒரு சம்பவம் நடந்திருக்குது. காங்கேசனில இருந்து கொழும்பு, கல்கிஸைக்கு மத்தியானம் போற இன்ரர்சிற்றி ரெயினுக்கு ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நாலுபேர் ரிக்கெற் புக் பண்ணியிருக்கினம். அப்பிடி ரிக்கெற் புக் பண்ணேக்க, அவையின்ர 'ஐசி' நம்பர் எல்லாம் குடுத்தவை. அதை செக் பண்ணின பிறகு எந்தெந்த சீற்றில ஆர் இருக்கோணும் எண்டு அதுக்குரிய ஐசி நம்பர் போட்டுத்தான் ரிக்கெற் குடுத்தவை. அப்பிடி ஐசி நம்பர் போட்டால், அந்த சீற்றில அந்தக் குடும்பத்துக்காரர்கூட இடம்மாறி இருக்கேலாது. அப்பிடி இருந்தால் அது பிழை. காங்கேசனில இருந்து வெளிக்கிட்ட இந்த இன்ரர்சிற்றி, மத்தியானம் ஒண்டரை மணிக்கு யாழ்ப்பாணம் ரவுணுக்கு வந்திருக்கு. "சரி, இந்த வெக்கைக்குள்ள இருந்து தப்பி இனி ஏசிக்குள்ள இருந்து போவம்" எண்டு இந்த நாலுபேரும் தங்கட ரிக்கெற்றில போட்டிருந்த சீற்றுகளுக்கு போயிருக்கினம். ஆனால் அங்க இவைக்கு ஒரு அதிர்ச்சி.

இவை இருக்கவேண்டிய சீற்றுகளில வேற நாலுபேர் இருந்து, போனை நோண்டிக்கொண்டிருந்திருக்கினம். "நாங்கள் சீற் நம்பர் மாறி வந்திட்டமோ?" எண்டு நினைச்ச இந்த நாலுபேரும் திரும்ப ஒருக்கா ரிக்கெற்றைப் பார்த்திருக்கினம். சந்தேகமேயில்லாமல், அதுதான் அவையின்ர சீற். அதால தங்கட சீற்றில இருந்தவையிட்ட விசயத்தைச் சொல்லி இருக்கினம். அப்பதான் அவைக்குத் தெரிஞ்சிருக்கு, அந்த சீற்றில நாலு சிங்கள ஆக்கள் காங்கேசனிலையே ஏறி இருந்திருக்கினம் எண்டு. ஆனாலும் அவை எழும்பி தமிழாக்கள் நாலுபேருக்கும் சீற்றைக் குடுக்கேலை. "நாங்களும் புக் பண்ணித்தான் வாறம். ஆனால் எங்கட சீற் வேற பெட்டியில இருக்கு. இது எங்களுக்கு வசதியா இருக்கு. அதால மற்றப்பெட்டியில இருக்கிற எங்கட சீற்றில போய் நீங்கள் இருங்கோ" எண்டு சொல்லிப்போட்டு அந்தச் சிங்கள ஆக்கள் தங்கடபாட்டில இருந்திருக்கினம். ஆனால் தமிழாக்கள் விடேலை. "அதெப்பிடி நாங்கள் போய் இருக்கிறது? உங்கட சீற் வேற பெட்டியில இருந்தால் நீங்கள் அதிலபோய் இருங்கோ. எங்கட சீற்றில எங்களை இருக்கவிடுங்கோ" எண்டு நிண்டிருக்கினம். அதுக்கு அந்தச் சிங்கள ஆக்களுக்கு கோபம் வந்திட்டாம்.

"நாங்கள் ஆரின்ர ஆக்கள் எண்டு தெரியுமோ?" எண்டு ஒரு அரசியல்வாதியின்ர பேரைச் சொல்லி, சண்டைக்கு வந்திருக்கினம். இப்பிடி ரண்டு தரப்பும் பிடிச்ச சண்டையால, இன்ரர்சிற்றி ரெயினை சாவகச்சேரியில நிப்பாட்டி, பிணக்கைத் தீர்க்க ரெயினில இருந்த பாதுகாப்பு அதிகாரிமார் வெளிக்கிட்டிருக்கினம், ஆனால் சிங்கள ஆக்கள், தாங்கள் அடாத்தாப் பிடிச்ச சீற்றில தான் இருப்பம் எண்டு அடம்பிடிச்சிருக்கினம். இப்பிடியே கிட்டத்தட்ட அரை மணித்தியாலத்துக்கு மேல ரண்டு தரப்பும் சண்டை பிடிக்க, இனியும் லேட்டாக்க ஏலாது எண்டு ஒரு தீர்வில்லாமலே ரெயின் வெளிக்கிட்டுட்டுதாம். கடைசிமட்டும் தமிழ் ஆக்களுக்கு அந்தச் சிங்கள ஆக்கள் சீற் குடுக்கவேயில்லையாம். ஒரு சீற் 'புக்' பண்ணிறதுக்கு ஐசி நம்பர் வேணும், லொட்டு வேணும், லொசுக்கு வேணும் எண்டு கேக்கிற ரெயில்வே திணைக்களம், இப்பிடி ஒராளின்ர சீற்றில இன்னொரு ஆள் இருந்தால் மட்டும் கண்ணைமூடிக்கொண்டு இருக்குது. உப்பிடி தமிழாக்கள் போய் சிங்கள ஆக்கள் புக்கிங் செய்துவைச்சிருக்கிற சீற்றில அடாத்தா இருந்திருந்தால் ரெயில்வே திணைக்களம் பேசாமல் விட்டிருக்குமோ? தமிழாக்களை அப்பிடியே தூக்கி வெளியில எறிஞ்சு போட்டெண்டாலும், சிங்கள ஆக்களை இருத்தி இருப்பினம். ரிக்கெற் இருந்தும், சீற் இருந்தும் காசைக் கட்டிப்போட்டு கொழும்பு மட்டும் நிண்டு போகோணும் எண்டு அவைக்கென்ன தலையெழுத்தோ? இந்த விசயம் பற்றி சம்பவம் நடந்து கொண்டிருக்கேக்கையே திசைகாட்டி எம்.பி. ஒருத்தருக்கும் அறிவிச்சிருக்கினம். ஆனால் அந்த எம்.பி. அதைப் பார்த்திட்டும் பாக்காத மாதிரி இருந்திட்டாராம். ஒரு ரெயின் சீற்றையே அடாத்தாப் பிடிச்சுப்போட்டு, இந்தவிதமா அநியாயமா நடக்கிறவை எங்களுக்கு சுயாட்சி தந்திட்டுத்தான் மற்றவேலை பாப்பினம் எண்டு இனியும் நம்பிறியளோ?

padsi@uthayan.com
- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். பிள்ளைகளுக்காக செலவுசெய்யநேரும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில்உள்ளவர்களின்தேவைகளுக்காக பாடுபடவேண்டி இருக்கும். உறவினர்வருகைஉற்சாகம் தரும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

**கன்னி:** முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**தனுசு:** அனுகூலமான நாள். ஆனால்,புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**மகரம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

# இலங்கையில் கழிவுகளை எரிபொருளாக மாற்ற LOLC எட்வான்ஸ் டெக் மற்றும் கோர்செய்ர் குழுமம் இணைந்து செயல்படுகின்றன



LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான LOLC எட்வான்ஸ் டெக்னாலஜிஸ் (LOLC AT), எம்ஸ்டர்டாமில் தலைமையகத்தைக் கொண்ட கோர்செய்ர் குரூப் இன்டர்நேஷனலுடன் இணைந்து, கெரவலப்பிட்டியில் உள்ள LOLC AT இன் தற்போதைய கழிவுகளிலிருந்து எரிபொருளை உருவாக்கும் ஆலையை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் ஒரு மைல்கல் கூட்டாண்மையை அறிவித்துள்ளது. இந்த மூலோபாய முயற்சி இலங்கையில் வளர்ந்து வரும் பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் கழிவு சவாலை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் ஒரு நாளைக்கு 7,000 மெட்ரிக் டொன் திடக்கழிவுகளை உருவாக்குகிறது. இது ஆண்டுக்கு சுமார் 2.56 மில்லியன் மெட்ரிக் டொன்களுக்கு சமம். இதில் குறிப்பிடத்தக்க பகுதி பாலிதீன் மற்றும் பிளாஸ்டிக் ஆகும். பிளாஸ்டிக் மாசுபாடு நாட்டின் மிகவும் அழுத்தமான சுற்றுச்சுழல் கவலைகளில் ஒன்றாக மாறியுள்ளது. இந்த கழிவுகளில் பெரும்பாலானவை நிரம்பி வழியும் நிலப்பரப்புகள், நீர்வழிகள் மற்றும் பெருங்கடல்களில் முடிவடைகின்றன, சுற்றுச்சூழல் அமைப்புகள், பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றுலாவுக்கு கடுமையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகின்றன.

LOLC AT 2023 ஆம் ஆண்டில் கழிவுகளிலிருந்து எரிபொருளை உருவாக்கும் ஆலையில் முதலீடு செய்து அதை 2024 முழுவதும் வெற்றிகரமாக இயக்கி வருகிறது. இந்த வசதி மறுசுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக்குகளை மீண்டும் பயன்படுத்தக்கூடிய எரிபொருளாக மாற்றுகிறது, புதைபடிவ எரிபொருட்களுக்கு ஒரு சாத்தியமான மாற்றீட்டை வழங்குகிறது, அதே நேரத்தில் குப்பைகளை குப்பை கிடங்கு மற்றும் எரிப்பிலிருந்து திருப்பி விடுகிறது. கோர்செய்ர் குரூப் இன்டர்நேஷனலுடன் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டாண்மை இந்த அடித்தளத்தின் மீது கட்டமைக்கப்படும், செயலாக்க திறனை அதிகரிக்கவும் செயல்திறனை மேம்படுத்தவும் அதிநவீன மேம்பாடுகளை அறிமுகப்படுத்தும். கோர்செய்ர், அதன் தொழில்நுட்ப கூட்டாளர்களுடன் சேர்ந்து, உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தனியுரிம தொழில்நுட்பத்தின் மூலம், இந்த திட்டம் உயர்தர, ISCC PLUS சான்றளிக்கப்பட்ட பைரோலிசிஸ் எண்ணெயை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தும், இது கழிவுகளை நிலையான மற்றும் அளவிடக்கூடிய வழியில் பொருளாதாரத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கக்கூடிய வளங்களாக மாற்றும் ஒரு முழுமையான வட்டப் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும்.

விரிவாக்கப்பட்ட வசதி, அதிக அளவிலான பிளாஸ்டிக் கழிவுகளைக் கையாளவும், பரந்த அளவிலான பொருட்களைச் செயலாக்கவும் முடியும், அவற்றை உயர்தர பைரோலிசிஸ் எண்ணெயாக மாற்றும், இது பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்களுக்கு புதிய பிளாஸ்டிக்குகளை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளாகச் செயல்படும், வட்ட பிளாஸ்டிக் மதிப்புச் சங்கிலிக்கு இந்த வசதியை முக்கிய பங்களிப்பாளராக நிலைநிறுத்தும். அவ்வாறு செய்வதன் மூலம், இது ஒரு முக்கியமான சுற்றுச்சுழல் சவாலை நிவர்த்தி செய்வது மட்டுமல்லாமல், பசுமையான வேலைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், புதுமைகளைத் தூண்டும், மேலும் நிலையான கழிவு மேலாண்மை தீர்வுகளில் இலங்கையை ஒரு பிராந்தியத் தலைவராக நிலைநிறுத்தும்.

அதிநவீன தொழில்நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இந்தப் புதிய வசதி, ஆண்டுதோறும் 12 மில்லியன் கிலோகிராம் பிளாஸ்டிக் கழிவுகளைச் செயலாக்கும் திறன் கொண்டதாக இருக்கும், இது உயர்தர பைரோலிசிஸ் எண்ணெயாக மாற்றப்படும். இந்த எண்ணெய் பெட்ரோ கெமிக்கல் துறைக்கு ஒரு நிலையான மூலப்பொருளாகச் செயல்படும், இது புதிய, மறுசுழற்சி செய்யப்பட்ட மற்றும் சுற்றுச்சுழலுக்கு உகந்த பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்ய உதவும். குப்பைக்கிடங்குகளில் இருந்து நிராகரிக்கப்படும் பிளாஸ்டிக்கை மதிப்புமிக்க மூலப்பொருட்களாக மாற்றுவதன் மூலம், இந்த வசதி சுற்றுச்சுழலை மாசுபாட்டிலிருந்து சுத்தம் செய்ய உதவுவது மட்டுமல்லாமல், இலங்கையில் மிகவும் நிலையான மற்றும் சுழற்சி பொருளாதாரத்திற்கும் பங்களிக்கும்.

இந்த வசதியின் கட்டுமானப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது, தோராயமாக இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கூட்டாண்மையின் கீழ், கோர்செய்ர் குழுமம் பிளாஸ்டிக் கழிவு மறுசுழற்சியில் அதன் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் உலகளாவிய அனுபவத்தையும் கொண்டு வரும், அதே நேரத்தில் LOLC AT அதன் செயல்பாட்டு திறன்களையும் இலங்கைக்கு நீடித்த சமூகபொருளாதார மற்றும் நிதி நன்மைகளை வழங்கும் திட்டங்களை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்பையும் பயன்படுத்தும்.

புதிய கூட்டாண்மை குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்ட LOLC எட்வான்ஸ் டெக்னாலஜிஸின் இயக்குநர்/தலைமை நிர்வாக அதிகாரி திரு. தனேஷ் அபேரத்ன, "இலங்கை இன்று எதிர்கொள்ளும் மிகவும் அழுத்தமான சுற்றுச்சுழல் சவால்களுக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டில் இந்த கூட்டாண்மை ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. கோர்சேரின் நிரூபிக்கப்பட்ட கழிவுஎரிபொருள் தொழில்நுட்பத்துடன் எங்கள் செயல்பாட்டு நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதன் மூலம், எங்கள் தற்போதைய வசதியின் செயல்திறன் மற்றும் திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், நாட்டின் பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் கழிவுப் பிரச்சினையில் ஒரு உறுதியான, நேர்மறையான தாக்கத்தை உருவாக்குவதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம். ஒன்றாக, சுற்றுச்சுழல் பொறுப்பை ஒரு பசுமையான எதிர்காலத்திற்கான நடைமுறை, அளவிடக்கூடிய செயலாக மாற்றும் புதுமைகளை நாங்கள் இயக்கி வருகிறோம்" என்று கூறினார்.

கோர்செய்ர் குரூப் இன்டர்நேஷனலின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. ஜுஸ்ஸி சலோராண்டா மேலும் கூறுகையில், "LOLC உடனான இந்தக் கூட்டாண்மையில் இணைவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், பெருமைப்படுகிறோம். இலங்கையில் மிகவும் பன்முகப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான,LOLC ஒத்துழைத்து அர்த்தமுள்ள தாக்கத்தை உருவாக்க எங்களுக்கு ஒரு சிறந்த தளத்தை வழங்குகிறது. கொழும்பில் உள்ள இந்த வசதி பல திட்டமிடப்பட்ட கூட்டு முயற்சிகளில் முதலாவதாகும், மேலும் இலங்கையின் நிலையான வளர்ச்சியில் முதலீடு செய்வதற்கு நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம். நாடு முழுவதும் உள்ள சமூகங்களுக்கு தூய்மையான, பசுமையான எதிர்காலத்தை உருவாக்குவதோடு, பிளாஸ்டிக் கழிவு சவாலை சமாளிப்பதையும் நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்."

**LOLC இன் மேம்பட்ட தொழில்நுட்பங்கள் பற்றி**

LOLC ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான LOLC எட்வான்ஸ் டெக்னாலஜிஸ் (பிரைவேட்) லிமிடெட், குழுமத்தின் ஆராய்ச்சி, புதுமை மற்றும் புதிய வணிக மேம்பாட்டுப் பிரிவாகும். இந்நிறுவனம் நாட்டிற்கு நீண்டகால சமூகபொருளாதார மதிப்பு மற்றும் நிதி வருமானத்தை உருவாக்கும் முன்னோடி முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது. தற்போதைய திட்டங்கள் கிராஃபீன், அதிக மதிப்புள்ள மசாலாப் பொருட்கள் பிரித்தெடுத்தல் மற்றும் அழுத்தும் சுற்றுச்சுழல் மற்றும் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் கழிவுகளிலிருந்து மதிப்புக்கு முன்முயற்சிகள் போன்ற மேம்பட்ட பொருட்களை உள்ளடக்கியது.

**கோர்செய்ர் குழுமம் பற்றி**

எம்ஸ்டர்டாமில் தலைமையிடமாகக் கொண்ட கோர்செய்ர் குரூப் இன்டர்நேஷனல், பிளாஸ்டிக் கழிவு மறுசுழற்சியில் வேகமாக வளர்ந்து வரும் நிறுவனங்களில் ஒன்றாகும், இது உயர்தர பைரோலிசிஸ் எண்ணெயை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது. ஆசியா, ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா முழுவதும் பரவியுள்ள செயல்பாடுகள் மற்றும் கூட்டாண்மைகளுடன், இந்த நிறுவனம், பெரும்பாலும் குப்பை மேடுகள் அல்லது பெருங்கடல்களுக்கு அனுப்பப்படும் பெட்ரோ கெமிக்கல் நிறுவனங்கள் எரிக்கப்பட்டு புழக்கத்தில் இருந்து இழக்கப்படும் எரிபொருட்களுக்குப் பதிலாக, புதிய பிளாஸ்டிக்குகளை உருவாக்குவதற்கான பிரீமியம் மூலப்பொருளாக மாற்றுவதில் நிபுணத்துவம் பெற்றது. கோர்செய்ரின் மேலும் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவம், பிளாஸ்டிக் மாசுபாட்டைக் குறைக்கும், வளங்களை மீட்டெடுக்கும் மற்றும் வட்ட பிளாஸ்டிக் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அளவிடக்கூடிய, வணிக ரீதியாக சாத்தியமான தீர்வுகளை செயற்படுத்துகிறது. அதன் சர்வதேச திட்டங்கள் மூலம், கோர்செய்ர் ஏற்கனவே ஆயிரக்கணக்கான டன் பிளாஸ்டிக்கை சுற்றுச்சுழலிலிருந்து திருப்பி, மிகவும் நிலையான உலகளாவிய எதிர்காலத்திற்கு பங்களிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# மலினப்படும் மனித உரிமைகள்..!

'எந்தவொரு நாட்டுக்கும் எதிராக அழுத்தங்களை வழங்குவதற்காக மனித உரிமைகள் விவகாரங்களைப் பயன்படுத்த முடியாது' என்று தெரிவித்திருக்கின்றார் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க. இலங்கைக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் மீது சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இம்முறையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறானநிலையிலேயே, மனித உரிமைகள் விவகாரங்களை முன்னிலைப்படுத்தி முன்வைக்கப்படும் அழுத்தங்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருக்கின்றார் அமைச்சர் பிமல்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்குள் இதுவரை எந்தவொரு அரசியல் அழுத்தங்களையும் முன்வைத்ததாக வரலாறு இல்லை. பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்பதையே அது நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றது. இன்று உலகில் பாதிப் பிரச்சினைகள் மனித உரிமைகளை மையப்படுத்தியே சுழன்று கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள் தொடர்பான அழுத்தங்களாலும், பொறுப்புக்கூறல்களாலும்தான் பல இனக்குழுமங்கள் மிச்சம் மீதி இருக்கின்றன. இவ்வாறான பின்னணியில், மனித உரிமைகள் விவகாரங்களை மையப்படுத்தி எந்தவொரு நாட்டுக்கும் அழுத்தம் வழங்கக்கூடாது என்ற அமைச்சர் பிமலின் கருத்து சிறுபிள்ளைத் தனமானது என்பதுடன், மனித உரிமைகளை இந்த அரசாங்கம் எவ்வளவு மெத்தனப்போக்குடன் எடுத்துக் கொள்கின்றது என்பதற்கான சான்றாதாரமாகவும் அமைந்திருக்கின்றது.

இலங்கையின் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையோ அல்லது பிரதான அனுசரணை மற்றும் இணை அனுசரணை நாடுகளோ எடுத்த எடுப்பில் தலையிடவில்லை. 2009ஆம் ஆண்டிலிருந்து ஏகப்பட்ட அவகாசங்களையும் பரிந்துரைகளையும் வழங்கித் தொடர்ச்சியாக ஏமாற்றமடைந்திருக்கின்றன. சர்வதேசத்தின் பரிந்துரையையும் சுயவாக்குறுதிகளையும் இலங்கை நிறைவேற்றியிருந்தால், இந்தப்பிரச்சினை என்றோ இறந்து புதைந்திருக்க வேண்டியதொன்று. ஆனால், அதை கடந்த அரசாங்கங்கள் நிறைவேற்றியிருக்கவில்லை. எனவே அமைச்சர் பிமல் நொந்துகொள்ள வேண்டியது இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களைத்தானே தவிர ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையோ அல்லது அனுசரணை நாடுகளையோ அல்ல. இதுவே அடிப்படை.

முன்பொரு காலத்தில் மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட பல நாடுகள், இன்று மனித உரிமைகள் விடயத்தில் பிற நாடுகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தக்கூடிய வகையிலும் வளர்ச்சியடைந்துள்ளன. இதற்கு உதாரணமாகத் தென்னாபிரிக்காவைக் குறிப்பிடலாம். ஒருகாலத்தில் கறுப்பின மக்களுக்கு எதிரான வதைகூடமாகத் திகழ்ந்த தென்னாபிரிக்காதான் இன்று, இஸ்ரேலுக்கு எதிராக மனித உரிமைக் குற்றச்சாட்டுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலும் கையாள்கின்றது. இதற்கு, தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும், மக்களின் மனங்களில் ஏற்பட்ட மாற்றமுமே பிரதான காரணங்கள். அவ்வாறான ஒரு நிலையை அடைவதைத்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டுமே தவிர, மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டும் தரப்புகளைக் குற்றஞ்சாட்டுதல் தகாது.

நாளொரு நல்வார்த்தை

ஒரு இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள், அதை அடைவதற்காக விடாமுயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்.

– டாக்டர் அம்பேத்கர்–



## மின்சாரக் கட்டண உயர்வு; மக்கள் கருத்தறிய ஏற்பாடு



கொழும்பு, செப்.11

**இந்த ஆண்டின் இறுதிக் காலாண்டில் மின்கட்டணத்தை 6.8 வீதம் உயர்த்துவதற்கு இலங்கை மின்சாரசபை பரிந்துரைத்துள்ளநிலையில், முன்மொழியப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக பொதுமக்களின் கருத்தைப் பெறப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.**

பொதுமக்கள் தங்கள் கருத்துகளையும் பரிந்துரைகளையும் எழுத்துப் பூர்வமாக ஆணையகத்திடம் சமர்ப்பிக்கலாம் என இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாய்மொழிக் கருத்துகளைப் பெற, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கிய ஒன்பது பொது ஆலோசனைகளை நடத்தவுள்ளது. வாய்மொழி சமர்ப்பிப்புகளுக்கான இந்தப் பொது ஆலோசனை அமர்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த ஆண்டின் மூன்றாவது மின்சாரக் கட்டணத் திருத்தம் பற்றிய பொது ஆலோசனை தொடர்பான எழுத்துப்பூர்வக் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் மின்னஞ்சல் (info@pucsl.gov.lk) மற்றும் வட்ஸ்அப் (076 427 1030) ஊடாகச் சமர்ப்பிக்கமுடியும் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## பலப்பிட்டியவில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்

கொழும்பு,செப்.11

பலப்பிட்டிய, ஹீனட்டிய வீதியின் பெட்டிவத்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் பலப்பிட்டிய, மகாலதுவப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷனவின் கொலையின் பிரதான சந்தேகநபரே தற்போது துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

அந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பலப்பிட்டிய நீதிமன்றத்தில் முன்னிலையாகிய பின்னர் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## அயலவருடன் தகராறு இளைஞர் கொலை!

கொழும்பு,செப்.11

அம்பாறைப் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மருதமுனைப் பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று பெரியநீலாவணை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மருதமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே கொலைசெய்யப்பட்டுள்ளார். இளைஞருக்கும் அயல் வீட்டுக்காரனுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## இலங்கையர்களுக்கு நேபாளத்தில் பாதிப்பில்லை

நேபாளத்தில் நடந்துவரும் நாடுதழுவிய போராட்டத் தாக்குதல்களில் அங்கு வசிக்கும் இலங்கையருக்கு இதுவரை எந்தவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று அங்குள்ள இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது. தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள அங்குள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக வீட்டிற்குள்ளேயே இருக்கவேண்டும். தொடர்புகொள்ள வேண்டிய அவசர எண்ணான +9779851048653 என்ற எண்ணில் நேபாளத்தில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளை 24 மணி நேரமும் தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சுங்கத் திணைக்களத்துக்குப் புதிய ஊடகப் பேச்சாளர்

கொழும்பு,செப்.11

இலங்கை சுங்கத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக சுங்க இயக்குநர் சந்தன புஞ்சிஹேவா நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கோட சுங்க இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். 1997ஆம் ஆண்டு உதவிச் சுங்கக் கண்காணிப்பாளராகப் பணியில் சேர்ந்த புஞ்சிஹேவா, தற்போது தகவல் தொழில்நுட்பப் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றிவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - ஆவணி 27
12.09.2025
சுபநேரம் : 06.03 - 07.33
ராகுகாலம் : 10.33 - 12.03

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சயனைட்' நாவல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.11
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளர் தீபச்செல்வன் எழுதிய 'சயனைட்' நாவல் அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் தொழிலதிபர் கந்தையா பாஸ்கரன் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் தயாபரன் லஜீர் சிறப்பு விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ர.கஜேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். நூலாசிரியர் தீபச்செல்வன் ஏற்புரை ஆற்றுவார். (ச-66)

அடுத்த மாதத்தில்

# 1000 பயனாளிகளுக்கு வீட்டு உரிமைப்பத்திரம்

கொழும்பு,செப்.11
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால், நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட வீடுகளுக்கான உரிமைப்பத்திரம் வழங்கும் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.**

இதன் முதற்கட்டமாக ஆயிரம் பயனாளிகளுக்கு அடுத்த மாதம் வீட்டு உரிமைப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுள சுகத் ரத்னாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நீண்டகாலமாக பல்வேறு காரணங்களால் பயனாளிகளின் வீடுகளுக்கான உரிமைப்பத்திரம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கம் துரிதமாக அதனை வழங்குவதற்கான விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும். உலக வீடமைப்பு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி, முதற்கட்டமாக ஆயிரம் பயனாளிகளுக்கு வீட்டு உரிமைப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் கொழும்பில் பிரதான நிகழ்வு இடம்பெறும். என்றார். (ச-இ)



# காற்றாலை விவகாரத்தில் போராட்டம் தீவிரமடையும்

## அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு,செப்.11
மன்னார் மாவட்டத்தில் காற்றாலை அமைக்கும் திட்டம் தொடர்பில் அரசாங்கம் மக்களின் கோரிக்கையை ஏற்காவிடில், எதிர்வரும் 19 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.
மன்னார் மாவட்டத்தில் காற்றாலை மின்கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக நேற்றுமுன்தினம் 38ஆவது நாளாகவும்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
காற்றாலை அமைப்பதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் 38 நாள்களைக் கடந்துள்ளது.
இந்த விடயத்தில் நீதி கிடைக்காதுவிடின் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பெரும் போராட்டம் வெடிக்கும். காலி முகத்திடல் 'அரகல' குழுவினர், பௌத்த மதகுரு ஆகியோர் கொழும்பில் இருந்து வருகைதந்து எமக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-56)




காங்கேசன்துறை வீதியில்

# ஒன்றுடன் ஒன்று மோதி 4 வாகனங்கள் விபத்து

யாழ்ப்பாணம்,செப்.11
யாழ்ப்பாணம் மருதனார்மடம் காங்கேசன்துறை வீதியில் மூன்று மோட்டார் சைக்கிளும் ஒரு துவிச்சக்கரவண்டியும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
வீதியில் பயணித்துக் கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி வீதியைக் கடக்க முற்பட்டவேளை பின்பக்கமாக வந்த மோட்டார் சைக்கிள் அந்தத் துவிச்சக்கரவண்டிமீது மோதியது. பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் நிலைகுலைந்து எதிர்த்திசையில் வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களுடன் மீது மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் சிக்கியவர்கள் சிறிய காயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். விபத்துத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-27-66-20)

# பெண் முயற்சியாளர்கள் நிதியுதவிக்குப் பதிவுசெய்க

சாவகச்சேரி, செப். 11
தென்மராட்சிப் பிரதேச பெண் தலைமைத்துவ தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவியாக 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.
ஆர்வமுள்ளவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயரினைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25,9)





# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பொன்னாலை மாணவன் சாதனை

யாழ்ப்பாணம்,செப்.11
2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன், 141 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலை சமூகத்துக்கும், தனது ஊருக்கும் பெருமை சேர்த்துள்ளார். அரங்கநாதன் தத்வார்த்தன் என்ற மாணவனே இவ்வாறு 141 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பொருளாதார ரீதியாக நலிவுற்றவர்களைக் கொண்ட கிராமமாக இருந்தபோதிலும், குறித்த மாணவன் சிறந்த பெறுபேற்றைப் பெற்று சாதித்துள்ளார். (ச-27)

# உடுவில் அதிபர் சங்கத்தின் சேவைநலன் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம். செப். 11
உடுவில் கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தின் ஏற்பாட்டில், சேவைநலன் பாராட்டு விழா சங்கத்தின் தலைவர் க.முரளிதரன் தலைமையில் கந்தரோடைதமிழ்கந்தையாவித்தியாசாலையில் இன்று மதியம் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதில்பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.இராமநாதன் அகியோர் கலந்து கொள்வர். (ச-25)

# வேலணையில் வாள்வெட்டு பிரதான சந்தேகநபர் கைது


யாழ்ப்பாணம்,செப்.11
வேலணைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தேடப்பட்டு வந்த நிலையில், பிரதான சந்தேகநபரை 10 நாள்களின் பின்னர் ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.
கடந்த மாதம் 31ஆம் திகதியன்று வேலணை அராலிச் சந்திக்கு அண்மையில் காரில் சென்ற ஒருவரை பட்டா ரக வாகனத்தில் சென்ற குழு ஒன்று வழிமறித்து வாளால் வெட்டி கடுங்காயங்களுக்கு உள்ளாக்கிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது.
காயமுற்ற நபர் யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் வாள்வெட்டுடன் தொடர்புடைய குழுவைத் தேடி பொலிஸார் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில் பிரதான சந்தேகநபர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் அதிகாரியான கொன்சாபத்து ஹரிதாஸ் தலைமையிலான அணியினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-27)

# முல்லை மாவட்டத்தில் விரைவில் வெளிச்சவீடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் விரைவில் வெளிச்சவீடு அமைக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோர் உறுதியளித்துள்ளனர். நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், கடற்றொழில் அமைச்சிடம் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த அமைச்சர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். வெளிச்சவீட்டின் உதவியுடனேயே மீனவர்கள் தொழிலுக்குச்சென்று தமது மீன்பிடித் துறைகளுக்கு கரைதிரும்பி வந்தனர். மீனவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகவிருந்த இந்த வெளிச்சவீடு 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்துடன் முற்றாக அழிவடைந்துள்ளது. எனவே முல்லைத்தீவில் வெளிச்சவீடொன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று ரவிகரன் கோரிக்கை விடுத்த நிலையில். இதற்குப் பதிலளித்த அமைச்சர்கள், வெளிச்சவீடு அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்- என்றனர். (ச-246,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



சங்கானை சிலம்புப்புளியடியை பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட ஐங்கரன் ஸ்ரோஸ் உரிமையாளர்

## இரத்தினம் மகாதேவன்

அவர்கள் கடந்த 09.09.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் (NKS) - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், ஜெயகாந்தன் (லண்டன்), ஸ்ரீகாந்தன் (சுதன்), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தங்கேஸ்வரி மற்றும் சந்திரவதனா, காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் வாமதேவி, இந்திரதேவன், வாசுதேவன், காலஞ்சென்றவர்களான வாசுதேவி, இந்திராதேவி மற்றும் காமதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சர்மிலா, அஜனா, விஜயகுமார் (அப்பன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வைஸ்ணவி, ஹம்ஷவி, லக்ஸ்ணவி, கவிஸ்ணவி, யஜனீஷ், சுவீஜா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


சிலம்புப் புளியடி வீதி
சங்கானை

தகவல் :குடும்பத்தினர்
077 749 3555, 077 754 9435

(CS 59370) E

# மரண அறிவித்தல்

பிறப்பு 01 . 12 . 1950



இறப்பு 09 . 09 . 2025

## அருட்தந்தை மனுவல் சவரிமுத்து அடிகளார்

தோலகட்டி செபமாலைத்தாசர் துறவு சபையைச் சார்ந்த அருட்தந்தை மனுவல் சவிரிமுத்து அடிகளார் கடந்த 09.09.2025 செவ்வாய்க் கிழமை இறையடி சேர்ந்துள்ளார்.

அவரது இறுதி அஞ்சலித் திருப்பலி இன்று (11.09.2025) வியாழக் கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். ஆயர் தலைமையில் இல.5, கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

அதன்பின் அவரது பூதவுடல் அச்சுவேலி தோலகட்டி ஆச்சிரமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செபமாலைத்தாசர் சபை

(C 59362) A

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1934



மறைவு 09 . 09 . 2025

## இராசமணி மலர்

இல 100, கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும், இல. 126/4, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட இராசமணி மலர் அவர்கள் கடந்த (09.09.2025) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - கண்ணகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இராசமணியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், பகவத்சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரவீந்திரன், நந்தினி, நிமலேந்திரன், மகேந்திரன், இரஞ்ஜனி, யோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், எலிசபெத், கந்தசாமி, ஆரியவதி, உதயராணி, அழகரத்தினம், நித்தியகலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அலெக்சாண்டர், ஜுலியா, பாலமுரளி, சிவசக்தி, பாலகுமரன், மயூரி, சோபிகன், நிதுஷா, கஜானன், அபிஷன், அருணன், அபிலாஷினி, நிவேதிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கிறித்விக்கின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2025) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
குடும்பத்தினர்
077 738 3649

இல.126/4, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS/59369) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 12 . 1948



மறைவு 09 . 09 . 2025

## அருட்பிரகாசம் மரியநாயகம்

சில்லாலையை பிறப்பிடமாகவும், இல 57 மத்தியூஸ் வீதி சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட அருட்பிரகாசம் மரியநாயகம் 09.09.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம் - யுஸ்ரினம்மா தம்பதியினரின் கனிஸ்ட மகனும், மேரி ஆன் றெமிஜியாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனசீலி, குணசீலியின் அன்புத் தந்தையும், ஷாம்சன் ஜெராட், கனியூட் ஆகியோரின் மாமனாரும் சஞ்ஜீத், டிலான், சஜோன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் சேவியர், பிரான்சிஸ் ஜோசப் மற்றும் இம்மானுவேல் லோறணஸ், காலஞ்சென்ற மேரி அந்தோனியாப்பிள்ளை மற்றும் யூஜின் மேரிராணி, மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11.09.2025 வியாழக்கிழமை பிற்பகல் 03.30 மணியளவில் யா/மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்று நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 891 5319
077 489 6038

இல 57, மத்தியூஸ் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன். சிவபாலன் 27ஆவது நினைவுதினம்

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினரின் ஏற்பாட்டில், யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர் பொன். சிவபாலனின் 27ஆவது நினைவுதினம் மூளாயில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பொன். சிவபாலன் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி யாழ். மாநகரசபையின் முதல்வராக பணியாற்றியதுடன் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

## பெயர் மாற்றம்

இதுவரை காலமும் யெனோவா ஆகிய என இருந்த எனது பெயரை இனிவரும் காலங்களில் அந்தோனிப்பிள்ளை மேரி ஜெனோவா என மாற்றி அனைத்து ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.மேரி ஜெனோவா**

## பெயர் மாற்றம்

கொம்பலாட்டி, சமரபாகுவை வசிப்பிடமாகக் கொண்ட இராசு - கிட்ணபிள்ளை ஆகிய எனது பெயரினை இராசு - ராஜன் என மாற்றம் செய்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்

(CS 30468)A **இராசு ராஜன்**

## வேலையாட்கள் தேவை

1. காசு வசூலிப்பவர்
2. விற்பனை உதவியாளர்
3. விற்பனை பிரதி நிதி
4. களஞ்சிய காப்பாளர்
5. கணக்காய்வாளர்
6. மேற்பார்வையாளர்
7. கூலியாட்கள்

077 772 2215, 075 919 1111

## யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

2026 புதிய கல்வியாண்டு

தரம் - 6 அனுமதி

2025 இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி தரம் - 6 இற்கு சித்தியடைந்த மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 10.09.2025 (புதன்கிழமை) முதல் காலை 8.00 மணி - 2.00 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு நேர்முகத்தேர்வின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**

26.09.2025

குறிப்பு:- கற்றலில் ஆர்வமுள்ள பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு உலகளாவிய பழையமாணவர் ஒன்றியத்தினால் கற்றல் வசதிகளும், பொருளாதார வசதிகளும் பெற்றுத் தரப்படும்.

அதிபர்

## வேலையாள் தேவை

ரூபின்ஸ் வைத்தியசாலை அருகில் புதிதாக திறக்கப்பட இருக்கும் புடைவை கடை ஒன்றுக்கு பெண் உதவியாளர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
வயது எல்லை - 18 - 40

070 372 6013

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டம் முளங்காவில் பிரதேசத்தில் விவசாய பண்ணை ஒன்றில் தங்கிநின்று வேலை செய்வதற்கு வேலை ஆட்கள் தேவை.

(CS/59364) J-1

தொடர்பு:- 071 175 5665

## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு மேசன், கூலி ஆட்கள் தேவை.

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.


தொடர்பு:- 074 070 3594

## பணிப் பெண் தேவை

நன்கு சமைக்க தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக்கூடிய பணிப் பெண் தேவை

தொடர்புகளுக்கு: 077 153 2398
077 072 5056

## மரண அறிவித்தல்



பிறப்பு 16 . 04 . 1948

இறப்பு 09 . 09 . 2025

### அமரர் கதிரவேலு குணபாலன் (பபா)

பழைய வீதி, கராஜ்லேன் கோப்பாய் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கதிரவேலு குணபாலன் அவர்கள் நேற்று முன்தினம் 09.09.2025 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், சந்திரிகா (பிரான்ஸ்), பிரதீபா (வீதி அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலன் (பிரான்ஸ்), நடராஜசிங்கம் (யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நயனிகாவின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற குணம் மற்றும் குணசீலன், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், குணபாலசிங்கம், குணசேகரம் மற்றும் ராஜசேகரம் (ஹொலண்ட்), சந்திரசேகரம் (பிரான்ஸ்), செயகுமார் (மோகன்) (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.09.2025) வியாழக்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் 'கந்தன் காடு' இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்

(CS 59363) E

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 . 04 . 1982

மறைவு 12 . 08 . 2025

கடந்த (12.08.2025) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வன்

### அமரர் சிவகுமாரன் ஓம்பிரகாஷ்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.09.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 30, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
021 222 8293

(CS/59371) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கான நீதியை மறுக்கிறது தே.ம.சக்தி அரசு!

*சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு*

**கொழும்பு, செப்.11**
**தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த அநீதிகளுக்கு, இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். விசாரணைகள் நடத்தப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும். இந்த விடயங்களை அரசாங்கம் மறுத்தால் தமிழ் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்கநேரிடும்.
ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அளித்துள்ள பதில் தமிழ் மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. இலங்கை விடயத்தில் சர்வதேச நாடுகள் தலையிடமுடியாது என்ற அவரது அறிவிப்பு தமிழ் மக்களுக்கான நீதியை முற்றாக நிராகரிப்பதாகவே அமைந்துள்ளது. இலங்கையை மாறிமாறி ஆட்சிசெய்த அரசாங்கங்களால் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டே வந்துள்ளன. தமிழ் மக்களுக்கான நீதி மறுக்கப்பட்டே வந்துள்ளது. தமிழ் மக்களுக்கான நீதி மறுப்பைத் தேசிய மக்கள் சக்தி அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜெனிவாவில் ஆரம்பித்து வைத்திருக்கின்றார் -என்றார். (எ-இ)

# தே.ம.சக்தி அரசாங்கத்துக்கு ஜெனிவாவில் அழுத்தமில்லை

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.11
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் கடந்த அரசாங்கங்களுக்குக் காணப்பட்ட அழுத்தம் எமது அரசாங்கத்துக்கு இல்லை. மனித உரிமைகள் தொடர்பான எமது நடவடிக்கைகளை சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய பொறிமுறை ஊடாக நீதியைப் பெற்றுக்கொடுப்போம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மாகாணசபைத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறும். எப்போது நடைபெறும் என்பது தொடர்பில் தற்போது குறிப்பிட முடியாது. இந்த விடயத்தில் சட்டத்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்தில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.
ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் எமது அரசாங்கத்துக்கு எந்த அழுத்தமும் இல்லை. ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை எமக்குச் சார்பாகவே இருக்கின்றது. மனித உரிமைகள் நல்லிணக்கம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்குச் சர்வதேசத்தின் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது.
தேசிய பொறிமுறைக்குள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும் என்று நம்புகின்றோம். இதுதொடர்பான சர்வதேசத்தின் மதிப்பீடுகளையும் அங்கீகரிக்கின்றோம். ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளில் அநாவசியத் தலையீடுகளைச் செலுத்தி அவற்றை வீணடிக்க விரும்பவில்லை.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் இரத்துச்செய்து, புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். நிகழ்நிலைக் காப்புச் சட்டதிருத்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம் - என்றார். (எ-இ)

# அரசியலில் நடப்பவற்றை அவதானிக்கிறாராம் சமல்

கொழும்பு, செப்.11
நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. தற்போது நடப்பவற்றை உன்னிப்பாக அவதானித்துவருகின்றேன் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச.
அரசியலுக்குள் வந்துவிட்டால் அதைக் கைவிடமுடியாது. நான் இன்னும் ஓய்வு பெறவில்லை. தற்போது நடப்பவற்றை அவதானித்துவருகின்றேன். எமக்கு மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை தேர்தலில் போட்டியிட்டே கண்டறியமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
கடந்த பொதுத்தேர்தலில் சமல் ராஜபக்ச போட்டியிடவில்லை. அவரது மகன் சஷீந்திர ராஜபக்ச போட்டியிட்டார் மண்கவ்வினார். பல மாதங்களுக்குப் பிறகு பொதுவெளிக்கு வந்த சமல் ராஜபக்சவின் அரசியல் நடவடிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (எ-44)

# தேடப்படும் சம்பத் மனம்பேரி ரவிராஜ் கொலைச்சந்தேகநபர்

*பெரமுன அவரை ஒப்படைக்கவேண்டுமென வலியுறுத்துகின்றார் நளிந்த ஜயதிஸ்ஸ*

கொழும்பு, செப்.11
ஐஸ் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டது என்று கூறப்படும் மூலப்பொருள்களை இரு கொள்கலன்களில் மறைத்து வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சம்பத் மனம்பேரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கொலை வழக்கிலும் சந்தேகநபராகக் காணப்பட்டுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சம்பத் மனம்பேரி என்ற சந்கேதநபர் நீண்டகாலமாகப் பொலிஸ் கொன்ஸ்டபிளாகவும், பின்னர் குறுகியகாலம் புலனாய்வுத்துறை அதிகாரியாகவும் செயற்பட்டுள்ளார். அத்துடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கிலும் சந்தேகநபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.
இந்தக் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டநிலையிலேயே அவர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருந்தார். அவரது கட்சி உரிமையை நீக்குவது மட்டும் போதாது. சம்பத் மனம்பேரியைப் பொலிஸில் ஒப்படைப்பதற்கு நாமல் ராஜபக்ச உள்ளிட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (எ-இ)



# ஹெரோய்னுடன் கைதான பெண் தப்பியோட்டம்

கொழும்பு, செப்.11
ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று ஹூரிகஸ்வெவப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரான பெண் பொரலுகந்தப் பிரதேசத்தில் வைத்து 2 கிராம் 160 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.
கைதுசெய்யப்பட்ட பெண் ஹூரிகஸ்வெ பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கழிவறைக்குச் செல்ல வேண்டும்எனக்கூறிச்சென்று பொலிஸ் அதிகாரிகளைத் தள்ளிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# துமிந்தவுக்கு மன்னிப்பு ஹிருணிகா ஆதரவு

கொழும்பு,செப்.11
துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்க, எனது தரப்பில் ஒத்துழைப்பு தேவைப்பட்டால் வழங்கத்தயார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
துமிந்த சில்வாவை ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் மட்டுமே விடுதலை செய்ய முடியும். அவ்வாறு செய்தால் கூட அது எனக்குப் பிரச்சினை இல்லை. இந்த விவகாரம் தொடர்பில் எனக்குத் தற்போது கோபம் மற்றும் வைராக்கியம் இல்லை. தற்போதைய ஜனாதிபதியோ அல்லது இனிவரும் ஜனாதிபதியோ அவருக்கு மன்னிப்பு வழங்கினால் அதனை நான் பெரிதுபடுத்தப்போவதில்லை. பொதுமன்னிப்புக்காக எனது தரப்பில் ஒத்துழைப்புத் தேவைப்பட்டால், அதனை வழங்குவதற்கும் தயார் - என்றார். (ச-44)

# பத்திரிகைப் பேரவைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய அனுமதி!

கொழும்பு, செப்.11
இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
சமகால தொடர்பாடல் தொழிநுட்ப வளர்ச்சியுடன் பத்திரிகை மற்றும் வானொலிக்கு அப்பால், தொலைக்காட்சி, இணையத்தளம் மற்றும் சமூக ஊடக வலையமைப்புக்கள் மிகவும் துரிதமாக மக்களிடையே பரவலடைந்துள்ளன. அவை மக்களுடைய வாழ்விலும் முக்கியமான தாக்கங்களைச் செலுத்துகின்றன. 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம், சமகால சமூக மற்றும் கலாசாரப் போக்குகளுக்கு ஏற்ப காலத்தோடு தழுவியதாக மேம்படுத்தப்படவில்லை. ஆகையால் இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைவுநாளும் பேருரையும்

யாழ்ப்பாணம், செப்.11

சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவுநாளும் நினைவுப்பேருரையும் வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு வாழ்வகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ், யாழ்.மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் சுப்பிரமணியம் வரத பாஸ்கரன், தொழிலதிபர் தோ.கிறிஸ்ரி செல்வராஜன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எவ்.எம். பிர்டவுஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழகச் சந்தைப்படுத்தல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. திருமதி.டிலோஜினி சங்கரதாஸ் கலந்து கொண்டு "செயற்கை நுண்ணறிவின் யுகம்: இயந்திரத்திலிருந்து மனித சிந்தனையின் பாதையில்..." எனும் தலைப்பில் நினைவுப் பேருரை ஆற்றுவார். (ச-25, 66)

## முன்னாள்...

வேற்றப்பட்டது. முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டவரைவு ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெற்ற விவாதங்களைத் தொடர்ந்து, மாலை 4 மணியளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், சட்டவரைவுக்கு ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக ஒரு வாக்கும் பதிவாகின. நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸாநாயக்க எதிராக வாக்களித்தார். இதையடுத்து 151:01 என்ற அடிப்படையில் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது. அத்துடன், 'ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)' சட்டவரைவில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்றுப் பிற்பகல் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

(அ-ம-44)

## வாகன விற்பனைக்கான பகிரங்க மூடிய கூறுவிலை கோரல்

**தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வரைவுள்ளது.)**

பதிவு இல Regd No : NN 59 பதிவுத்திகதி : 31.12.2003

சமாசத்துக்கு சொந்தமான பின்வரும் வாகனங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கு பொருத்தமான கேள்விதாரர்களிடமிருந்து பகிரங்க மூடிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| வாகனம் | வாகன இலக்கம் |
|---|---|
| பிக்கப் | NPLA 6199 |
| லொறி (கூலர்) | NPJK 0583 |
| லொறி (கூலர்) | NPJK 0581 |

மேற்படி வாகனங்களை தலைவர் தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அவர்களுடன் 0779773412, 0704631144 என்ற தொலைபேசி இலக்கதடதிற்கு தொடர்பு கொண்டு 11.09.2025 திகதி முதல் 17.09.2025 திகதி வரை பார்வையிட முடியும்.


வாகனம் / வாகனங்களை கொள்வனவு செய்ய விரும்புவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை (முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் தொலைபேசி இலக்கம், வாகனத்தின் இலக்கம், கொள்வனவு பெறுமதி என்பன உள்ளடங்கலாக) தலைவர் தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 4ம் வட்டாரம், வேலணை என்னும் முகவரிக்கு 25.09.2025 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்க முடியாத வைப்பு பணமாக ரூபாய் 1000,00/- ஐ நேரடியாக பொருளாளர் தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற் தொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாசம். அவர்களிடம் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.
2. விண்ணப்பத்தினை பதிவுத்தபாலில் மட்டும் அனுப்பிவைக்க முடியும்.
3. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் குறித்த வாகனத்தின் விற்பனை செய்யப்படும் தொகையின் 10% அன்றய தினம் செலுத்துவதுடன் மீதியினை 14 நாட்களுக்குள் செலுத்தி வாகனத்தினை அகற்றுதல் வேண்டும்.
   ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் யாவும் 30.09.2025 திகதி காலை 11.00 மணிக்கு சமாச அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும் கேள்விதாரர்கள் சமூகமளிக்க முடியும்.
4. சமாச இயக்குனர் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்
தீவுப்பகுதி தெற்கு பிரதேச கடற்தொழிலாளர்
கூட்டுறவு சங்கங்களின் சமாசம்.

## மரண அறிவித்தல்



### நாகேசு சாந்தலிங்கம் (தம்பு)

யாழ். வேலணை மேற்கு, சிற்பனை 6ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு 8ம் வட்டாரம் புளியங்கூடல் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு சாந்தலிங்கம் அவர்கள் கடந்த (08-09-2025) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேசு-தர்மச்செல்வி தம்பதியரின் அன்பு மகனும், இராசரட்ணம்-செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற சரசமலர் (ராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை (சண்முகலிங்கம்), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், குமுதன் (கனடா), விஜிதா (ஜேர்மனி), வினோதா (வினோ), ஜனகன் (பிரான்ஸ்), அருளினி (அரு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தா, ஜெகதீசன் (சிங்கம்), ஜெகதீஸ்வரன் (ஜெகா), தமிழினி (றாதி), சுவேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபிஷனா, அஸ்விகா, அபிரன், ஜெசிந்தன் றம்மியா, கௌசிகா, யதுஷா, ஜீவனா, இலக்கியா, அற்சயா, தபிஜன், காலஞ்சென்ற தர்வின் மற்றும் தஸ்வின், கீர்த்தன், கினுஷன், கிஷான் ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் ரவிக்குமார் (கனடா), சிவகுமார் (கனடா), பாலகுமார் (கனடா), அருணோதயகுமார் (அருணா-கனடா), அருள்ஜோதி (கனடா), அருந்ததி (கனடா) ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், பிரகலாதனன் (ராசன்-ஜேர்மனி), காலஞ்சென்ற வேல்முருகன் (வடிவேல்) மற்றும் ஜெகதீசன் (சிங்கம்-ஜேர்மனி) ஆகியோரின் அன்பு தாய்மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, கைலாசபிள்ளை, அம்பிகைபாலன், புஸ்பகலாராணி (அவுஸ்திரேலியா), வசந்தகுமாரி, பவானந்தராணி, மகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும்,கிருஸ்ணபாலன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற கணநாதன் (குட்டி) மற்றும் ஆனந்தரூபன், வசந்தகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11-09-2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 01.00 மணிக்கு வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 05 . 1954



மறைவு
10 . 09 . 2025

### சுப்பிரமணியம் செல்வமணி

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செல்வமணி அவர்கள் நேற்று (10.09.2025) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னபூரனம் தம்பதியினரின் மருமகளும், சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், உதயபாலன் (இந்துக்கலாச்சார உத்தியோகத்தர் - மாவட்டச்செயலகம் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற உதயநாதன் மற்றும் மணிவண்ணன், தயாளன், குலேந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அஜந்தா, சுபிதா, கிருஷ்ணவேணி (ஆசிரியை, யாழ் சண்டிலிப்பாய் வடக்கு த.மி.க பாடசாலை), ஜதிகா (யாழ் மானிப்பாய் மகளிர் கல்லூரி), அம்பிகைபாலன் (யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் செல்வரத்தினம், அரசமணி ஆகியோரின் சகோதரியும், மொகேஸ்ராம், கஜிதா, அபிராம், கிஷானா, அபிலாஸ், அபிநயா, சங்கீத், அகினாஸ், தக்ஷயா, அத்விகா, வெண்ணிலா, வேலாஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மூத்தமகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு
மானிப்பாய்

தகவல் :
**குடும்பத்தினர்**

(CS 59374) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிபதிகள்...

றிய நீதிபதி பி.சிவகுமார், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி எஸ்.சதீஸ்கரன், சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார்.
மூதூர் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி ரி.எம்.பௌசான், மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி எஸ்.லெனின்குமார் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார்.
பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி கே.பொன்னுத்துரை, கிளிநொச்சி மேலதிக மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார்.
வவுனியா மாவட்ட மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய நீதிபதி எஸ்.ஜெயதிலீபன் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார். (அ-ம-26)

## சபாநாயகருக்கு...

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்காமல் சபாநாயகர் நேற்று நிராகரித்துள்ளார். இதையடுத்தே, சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவது தொடர்பில் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. கருத்துத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் தற்போதுதான் முதன்முறையாக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் 1978ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவர் ஒருவருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது. இந்திய நாடாளுமன்றத்தில் உப ஜனாதிபதிக்கு எதிராகக்கூட நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் எதிரணிகளின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்காவிட்டால் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர நேரிடும். அதனால் தனது முடிவை சபாநாயகர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் - என்றார். (அ-எ-44)

## மக்களின்...

ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
உலக நாடுகள் பலவற்றில் ஜனாதிபதிகள் ஓய்வு பெற்றுவிட்டால் அவர்கள் தனிப்பட்ட அரசியலைபுறமொதுக்கிவிட்டு நாட்டின் அபிவிருத்திக்காகவும் வளர்ச்சிக்காகவுமே செயற்படுகின்றனர். அதற்காகவே அவர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இலங்கையில் அவ்வாறான நிலை உள்ளதா என நாங்கள் சிந்திக்க வேண்டும். எமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு மக்களைச் சுரண்டி வாழ்வதற்கு முனைகின்றனர். மக்களைச் சுரண்டி தமது மகன்களுக்கு மாளிகைகளைக் கட்டுகின்றனர். தோல்வியில் இருந்து மீண்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொடர்பில் எண்ணுகின்றனர். இவர்களால் நாட்டின் நலனுக்கு எந்த நன்மையும் இல்லை. எனவே, மக்களின் வரிப்பணத்தில் அவர்களைப் பராமரிக்கமுடியாது.
முன்னாள் ஜனாதிபதிகளின் மகன்கள் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான காலணிகளை அணிகின்றனர். விண்கலன்களை ஏவுகின்றனர். இவ்வாறு செயற்படுகின்றவர்களுக்கு தமது தந்தையைப் பராமரிக்கமுடியாதா? - என்றார். (அ-ம-44)

## சர்வதேசப்...

தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தமிழரசுக்கட்சி வெளியிட்ட அறிக்கையின் சாரம்சமாவது:-
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளைத் தமிழர்களுக்கு வழங்கியது. ஆனால், ஆட்சியைப் பொறுப்பேற்று ஒரு வருடமாகியும், அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இன்னமும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த விடயத்தில் எமது ஆழ்ந்த ஏமாற்றத்தைப் பதிவுசெய்கின்றோம்.
தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய நல்லிணக்கம் என்றெல்லாம் அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், மிக இலகுவில் செயற்படுத்தக்கூடிய முயற்சிகள்கூட இன்னமும் மேற்கொள்ளப்படாமை துயரமானது.
பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நீக்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு பதிலாக, புதிய சட்டங்கள் இயற்றப்படாது என்றும் மாற்றுச் சடடங்கள் கொண்டுவரப்படாது என்றும் அரசாங்கம் கூறியிருந்தபோதிலும், தற்போது புதியதொரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இது கண்டிக்கத்தக்க விடயமாகும்.
யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் 240 எலும்புக்கூடுகள் இன்றுவரை அவதானிக்கப்பட்டு 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த உயிரிழப்புகளை அடையாளம் காண உள்ளூர் நிபுணத்துவம் இல்லாமை நிதர்சனமான உண்மை. இருந்தும், அரசாங்கம் சர்வதேச உதவியை இன்னமும் கோரவில்லை - என்றுள்ளது. (அ-ம-26)

## அரசமாளிகையில்...

அரசமாளிகையில் இருந்து, தங்காலையிலுள்ள தனது கால்டன் இல்லத்தில் மஹிந்த குடியேறவுள்ளார் எனவும், இதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.
முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகள் அனைத்தும் நீக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிவித்திருந்தது. இதற்கமைய அரசமாளிகையில் இருந்து வெளியேறுமாறு மஹிந்த ராஜபக்சவுக்கு ஊடக சந்திப்புகள்மூலம் வலியுறுத்தப்பட்டது. எனினும், தனக்கு சட்டப்பூர்வமாக அறிவித்தால் மட்டுமே அது தொடர்பில் பரிசீலிக்க முடியும் என மஹிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இதனால் இந்த மாளிகை தொடர்பான விவகாரம் அரசியல் ரீதியில் பெரியளவு பேசுபொருளானது.
இவ்வாறான பின்னணியில், ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை நீக்குவதற்குரிய சட்டமூலம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை சபாநாயகர் சான்றுரைப் படுத்தியுள்ளதால் சட்டம் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதனையடுத்தே அரச மாளிகையில் இருந்து இன்று வெளியேறுவதற்கு மஹிந்த ராஜபக்ச திட்டமிட்டுள்ளார்.
அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலையே ராஜபக்சக்களின் பூர்வீகம். அரசியல் கோட்டை. அங்கிருந்தே மஹிந்தவின் அரசியல் பயணம்கூட ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## எண்ணெய்...

இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. தீயைக் கட்டுப்படுத்தும் பணிகளுக்காக, கொலன்னாவை மற்றும் கொழும்பில் இருந்தும் தீயணைப்புப் படையினர் அழைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## மாடியிலிருந்து...

தவறி வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
குகராசசர்மா அரிஷ்சர்மா (வயது-22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் சூரிச் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## குளவிகொட்டி...

தவராவார். நேற்றுமுன்தினம் மாலை அவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார். இதையடுத்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சில மணிநேரத்தில் உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
SPACE FESTIVAL 2025
12 SEP
2025 FRIDAY 09.00 AM
VENUE : SLIIT NORTHERN UNI, JAFFNA

மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான
விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம்
மற்றும் புத்தாக்கங்களின் சங்கமம்
SPACE FEST 2025
SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna
021 7534 807
northernuni.lk apply@northernuni.com

தென்னங்காணி விற்பனைக்கு
கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
19 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
தொடர்புகளுக்கு: 077 327 6500

தவறவிடப்பட்டது
அராலி தெற்கைச் சேர்ந்த குணபாலன் சறோஜினிதேவி ஆகிய எனது தங்கச் சங்கிலி (பென்ரனுடன் கூடிய 3 3/4 பவுண்) 06.09.2025 செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா அன்று கோயில் முன்றலில் தொலைக்கப்பட்டுவிட்டது.
கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்
077 911 6216, 077 746 7831
(CS 59217) E

வேலையாட்கள் தேவை
யாழ். மானிப்பாயில் இயங்கிவரும் குளிர்பானக் கடைக்கு குளிர்பானம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஆண் வேலைக்குத் தேவை.
வேலை நேரம் பி.ப. 3.00 - நள்ளிரவு 12.00
தொடர்பு: 077 785 3165
(CS/59366) J-1

காணி விற்பனை
சித்தன் கேணியில் 2 3/4 பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 077 618 0644
(CS 59357) E

மணமகள் தேவை
யாழ் இந்து (V) 1980 இல் பிறந்த ஜேர்மனியில் வசிக்கும் மணமகனுக்கு 35 வயதிற்கு மேற்பட்ட மணமகள் தேவை. தரகர் தேவையில்லை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை
தொடர்பு: 077 977 0451
WhatsApp: 0044 7741 212937


காணியும் வீடும் விற்பனைக்கு
கந்தர்மடத்தில் சகலவசதிகளுடன் 3 பரப்பும் 1 1/2 குளியும் உடைய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.
10 அறைகள், நன்னீர் கிணறு, நான்கு பக்கமும் சுற்றுமதில்.
தரகர் தேவையில்லை.
077 960 4095, 077 277 0966
(CS/59323) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் மானிப்பாயில் 21 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு




- ✸ மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2 வது காணி.
- ✸ மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து 600m தூரத்தில் அமைந்துள்ளது.
- ✸ 20 அடி பாதையுடன்
- ✸ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✸ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✸ நன்னீர் ஊற்று சூழல்.
- ✸ ஒரு பரப்பின் விலை 55 லட்சம் ரூபாய்.

## பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

(CS/59372) J-1

தொடர்புகளுக்கு :- ஜெயம்

# 077 814 7389
# 077 986 5457

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org